# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை – 2015

| தரம் : 09 | சைவநெறி<br>பெயர் / சுட்டெண் : ........................................................ | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. எந்தக் காரியத்தை தொடங்கு முன்னும் முதலில் வழிபட வேண்டியவர்
    1) சிவபெருமான் 2)) விநாயகர்
    3) முருகன் 4) வைரவர்

02. கிரியை நெறியில் நின்று இறைவழிபாடு செய்தவர்
    1) சுந்தரமூர்த்திநாயனார் 2) மாணிக்கவாசகர்
    3) திருஞானசம்பந்தர் 4) நாவுக்கரசர்

03. மக்கள் இயற்கையை தெய்வமாகப் போற்றி வழிபட்ட காலம்
    1) வேத காலம் 2) புராண காலம்
    3) இதிகாச காலம் 4) சங்க காலம்

04. சிவராத்திரி தினத்தில் இரண்டாம் சாமத்தில் வழிபடப்படுபவர்
    1) தென்முகக் கடவுள் 2) இலிங்கோற்பவர்
    3) சோமஸ்கந்தர் 4) சந்திரசேகரர்

05. கைலைக்கு முதலிலே தலையால் நடந்து சென்ற பெண்ணடியார்
    1) மங்கையற்கரசியார் 2) சங்கிலியார்
    3) காரைக்காலம்மையார் 4) பரவையார்

06. வேதங்கள் மனிதரால் ஆக்கப்படாதவை என்பதால் வழங்கப்பட்ட பெயர்
    1) சுருதி 2) எழுதாக்கிளவி
    3) அபௌருஷேயம் 4) மறை

07. பத்தாம் திருமுறையாக அமைந்தது
    1) திருமந்திரம் 2) தேவாரம்
    3) பெரிய புராணம் 4) திருப்பல்லாண்டு

08. இறைவனுக்கு 1008 நாமங்கள் கூறி அர்ச்சிப்பது
    1) சோடசநாமம் 2) அஷ்டோத்திரநாமம்
    3) சகஸ்ரநாமம் 4) திரிசதி நாமம்

09. ஆருத்திரா தரிசனம் மிகச் சிறப்பாக நடைபெறும் தலம்
    1) சிதம்பரம் 2) திருப்பெருந்துறை
    3) திருப்புகலூர் 4) திருவதிகை



kalvi.lk

10. இறைவனுடைய சோதி சுருங்கிய வடிவமாய் நிற்பது
1) திருப்பதி
2) திருச்செந்தூர்
3) திருவண்ணாமலை
4) தில்லை

11. ஒருவர் இறந்த திதியில் வருடம் ஒருமுறை செய்யப்படுவது
1) மாசியம்
2) மகாளயம்
3) சிரார்த்தம்
4) அந்தியேட்டி

12. கொடிச் சீலை குறித்து நிற்பது
1) பதி
2) பசு
3) பாசம்
4) மும்மலம்

13. திருஞானசம்பந்தர் இறுதியாகப் பாடிய தேவாரம்
1) "தோடுடைய செவியன்........"
2) "மந்திரமாவது......."
3) "காதலாகி......."
4) "பண்ணும் பதமேழும்......"

14. கருவறையின் தெற்குப் புறச் சுவரில் அமைந்திருக்கும் மூர்த்தம்
1) தட்சணாமூர்த்தி
2) இலிங்கோற்பவர்
3) நடராஜர்
4) சந்திரசேகரர்

15. விஜயதசமியன்று ஆலயங்களில் நடைபெறுவது
1) சூரசங்காரம்
2) யமசங்காரம்
3) மகிடாசுரசங்காரம்
4) நரகாசுர சங்காரம்

16. சகலகலாவல்லி மாலையை அருளியவர்
1) குமரகுருபரர்
2) அபிராமிப்பட்டர்
3) காரைக்காலம்மை
4) கபிலர்

17. தட்சணாயன தொடக்க முதல் நாளில் கொண்டாடப்படும் பண்டிகை
1) தைப்பொங்கல்
2) தீபாவளி
3) ஆடிப்பிறப்பு
4) வருடப்பிறப்பு

18. பிறரோடு நல்லிணத்துடன் வாழ வழிவகுப்பது
1) பொறுமை
2) சமாதானம்
3) உண்மை பேசல்
4) தலைமைத்துவம்

19. வாழ்க்கையின் நான்கு படிநிலைகளாக அமைந்தவை
1) அறம், பொருள், இன்பம், வீடு
2) சரியை, கிரியை, யோகம், ஞானம்
3) மனம், புத்தி, சித்தம் அகங்காரம்
4) பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்தியாசம்

20. வாகனத் திருவிழாக்கள் குறித்து நிற்கும் இறைவனின் தொழில்
1) படைத்தல்
2) காத்தல்
3) மறைத்தல்
4) அருளல்

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் பாடல்களுள் இரண்டினை பிழையின்றி எழுதுக.
பாடியவர் பெயர், தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

1) "ஓசையொலி யெலாம்......" 2) "செம்பொன்னேர் சடை....."

3) "துஞ்சலும் துஞ்சல்....." 4) "நையாத மனத்தினனை......."

5) "இறவாத இன்ப....."

(16 புள்ளிகள்)

02. மனித வாழ்வை விரதங்களும் பண்டிகைகளும் வளம்படுத்துகின்றன.

1) நவராத்திரி விரதம் அனுட்டிக்கும் தினத்தைக் குறிப்பிடுக.
2) சிவராத்திரி விரதத்திற்குரிய நியதிகள் மூன்றினை எழுதுக. அனுட்டிக்கும் காலம் யாது?
3) சித்திரை வருடப்பிறப்பன்று மேற்கொள்ளப்படும் சமய செயற்பாடுகள் யாவை?
4) தீபாவளிப் பண்டிகை மூலம் வளர்க்கக் கூடிய விழுமியப் பண்புகள் யாவை?

(02 + 03 + 03 + 03 =11 புள்ளிகள்)

03. இதிகாச புராணங்கள் சமய உண்மைகளை எடுத்துரைப்பன.

1) புராணங்கள் குறிப்பிடும் பஞ்ச இலக்கணங்கள் யாவை?
2) இதிகாசம் என்பதன் பொருள் யாது?
3) காரைக்காலம்மையார் அருளிய நூல்கள் யாவை? எத்தனையாம் திருமுறையில் அடங்கும்?
4) தமிழில் எழுந்த புராணங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(03 + 02 + 03 + 03 =11 புள்ளிகள்)

04. திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாடல்களாகும்.

1) திருமுறைகளை தொகுத்தவர் யார்? தொகுப்பித்தவர் யார்?
2) தேவாரங்களுக்குரிய சிறப்புகள் மூன்று எழுதுக.
3) தாண்டகவேந்தன் என அழைக்கப்பட்டவர் யார்? அதற்கான காரணம் யாது?
4) "யாவர்க்குமாம் இறைவர்க்கு ..." என்ற பாடலில் கூறப்பட்டுள்ள அறங்கள் யாவை?

(02 + 03 + 03 + 03 =11 புள்ளிகள்)

05. மனித வாழ்வை மேம்படுத்துவன விழுமியங்களாகும்.

1) ஒருவரிடம் இருக்க வேண்டிய தலைமைத்துவப் பண்புகள் யாவை?
2) சகிப்புத் தன்மை இல்லாத போது ஏற்படக் கூடிய தீய விளைவுகள் ஐந்து எழுதுக.



kalvi.lk

3) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல... என்ற குறளை எழுதி பொருளையும் எழுதுக.

4) பாடசாலையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள் மூன்று எழுதுக.

(03 + 02 + 03 + 03 =11 புள்ளிகள்)

06. ஆலயக் கிரியைகள் இறையுணர்வை அளிப்பன.

1) மகோற்சவம் என்பதன் கருத்து யாது?

2) கொடியேற்றத்தின் முன் நிகழும் கிரியைகள் எவை?

3) இறைவன் மறைப்புத் தொழிலை செய்வதற்கான காரணம் யாது?

4) ஆலய வழிபாட்டின் மூலம் கிடைக்கும் பயன்கள் யாவை?

(02 + 03 + 03 + 03 =11 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) ஆகமங்கள்

2) வீட்டில் வழிபாடு

3) நடராசர்

4) குருபூசை

5) சைவ நாற்பாதங்கள்

($5\frac{1}{2}$ + $5\frac{1}{2}$ =11 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk



தரம் 01 - 10
3ம் தவணை
REVISION | PAPER DISCUSSION
ஆரம்பம் - 01.12.2024
மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்
இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.
JOIN NOW
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன..
கட்டண விபரங்கள்
தமிழ் Medium
தரம் 01-02 2000/=
தரம் 03-05 2500/=
தரம் 06-10 3000/=
English Medium
தரம் 06-07 3500/=
Education கல்வி අධ්‍යාපන
KALVI.LK
WHATSAPP
075 287 1457